Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 28 (13 - 08 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 176

## கிளிநொச்சித் தபால்கள் 2 மாதமாகத் தேக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தபால்கள் கடந்தஇரண்டு மாதங்களாக வவுனியாவில் தேங்கிக்கிடக்கின்றன. கடந்த ஜூன் மாதத்திற்குபின் வவுனியாவிலிருந்து தபால்கள்கிளிநொச்சிக்குக்கொண்டுவரப்படவில்லை என தபாலகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வவுனியா இராணுவக்கெடுபிடி, தொடர்ச்சியான ஊரடங்கு, வாகனவசதி இன்மை (4ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு நிவாரணம் நிறுத்தல்;

# சிறிலங்கா அரசாங்கத்தின் முடிவிற்கு யாழ். செயலக அதிகாரிகள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**வடபகுதி மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை நிறுத்துவது என்ற சிறிலங்கா அரசின் முடிவுக்கு யாழ். மாவட்டத்தின் உயர் அரச அதிகாரிகள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்,**

யாழ். மாவட்டத்தின் சகல உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் செயலகபுனர்வாழ்வுப் பிரிவு உயர் அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் மேற்படி முடிவை முற்றாக எதிர்த்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பான சகல விபரங்களை உள்ளடக்கியும், உலர் உணவு விநியோகத்தைத் தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் புனர்வாழ்வு அமைச்சைக் கோரி மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் நிவாரண நிறுத்தம் தொடர்பான சுற்று நிருபம் வாசிக்கப்பட்டது. இதன்படி இம்மாதம் முதல் முகாம்களுக்கு வெளியில் இருக்கும் சகலருக்கும் நிவாரண விநியோகத்தை நிறுத்தும்படி கோரப்பட்டிருந்தது.

உதவி அரசாங்க அதிபர்கள் இக்கூட்டத்தில் தமது பகுதியின் உணவு நிலைமைகள்தொடர்பாக விளக்கமளித்தனர்.

பெரும்பாலான மக்கள் தொழில் இழந்தும், பாதிக்கப்பட்டும் இருக்கும் இந்நிலைமையில் இடம் பெயர்ந்த பெரும்பாலான மக்களும் முகாம்களில் அடிப்படை வசதிகள் அற்ற காரணத்தினால்முகாம்களை விட்டு வெளியேறி தாம் விரும்பும் இடங்களில் வாழ்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் தற்போது அத்தியாவசியப்பொருள்களின் விலை சுமார் 600% உயர்வடைந்திருப்பதால் தொழில் மூலம் கிடைக்கும் ஊதியம்வாழ்க்கைச்செலவுக்கு போதுமானதாக இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறானநிலைமைகளால் மக்கள் மரணத்தின் பிடியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரண நிறுத்தத்தை எதிர்த்து யாழ். செயலகம் முன் மறியல்

யாழ். மாவட்ட மக்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டதற்கான நியாயபூர்வமான காரணம் கோரியும், நியாயபூர்வமான காரணம் இல்லாத பட்சத்தில் அவ்வுரிமைகளை வழங்கும்படி கோரியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை யாழ். செயலகத்தின் முன்னால் மறியல் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இம் மறியல் போராட்டத்தினை ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பான ஒருங்கிணைப்புக்குழு செய்திக் குறிப்பொன்றையும் விடுத்துள்ளது. அதில் யாழ். யாவட்டத்தில் இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் அரசின் பொருளாதாரத் தடைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளவேளையில்சனசவிய உணவு முத்திரைத்திட்டங்கள் நிறுத்தப்பட்டு இன்று நிவாரணமும் நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கைத்தீவின் ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற இவ்வுரிமைகள் யாழ். மாவட்ட மக்களுக்கு மறுக்கப்படுவதற்கான நியாயபூர்வமான காரணங்களை அரசிடமிருந்து கோரியும், நியாயபூர்வமான காரணங்கள் இல்லாத பட்சத்தில் இவ்வுரிமைகளை வழங்கும்படி கோரியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 16-08-91 காலை யாழ் செயலகத்தின் முன்னர் மறியற் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மறியற் போராட்டம் தொடர்பாகவும், அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக கலந்துரையாடல்களும் செயற்பாட்டுக் குழுக்களும் அமைக்கப்படவுள்ளன. இதற்கான இடங்களும், காலமும் கீழே தரப்பட்டுள்ளது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுமுள்ள சமூகசேவை மன்றங்கள், கழகங்கள், பொதுஸ்தாபனங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மக்கள் நலனில் ஆர்வமுள்ளவர்கள் தத்தமதுபிரிவில் நடைபெறும் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளுமாறு ஒருங்கிணைப்புக்குழு கோரியுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கே கொண்டுவர தடைவிதித்த பொருள்களின் விபரம்

(கொழும்பு)

வடக்கிற்கு கொண்டுசெல்ல முடியாது என தடை விதித்துள்ள பொருள்களின் பெயர்ப் பட்டியலை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வர்த்தமானியில் பிரசுரித்துள்ளது.

இந்தப் பொருள்களில் விளையாட்டுத் துவக்குகள், இனிப்பு வகைகள் மற்றும் இனிப்புப் பொருள்களும் அடங்குகின்றன.

இவற்றின் பட்டியல் வருமாறு: ஆயுதங்கள், வெடிபொருள்கள், விளையாட்டுத் துவக்குகள், மின்சார வயர், தொலைவில் இருந்து இயக்கும் சாதனம், மின்சார விளையாட்டுப் பொருள்கள், தலைக் கவசங்கள், தொலைநோக்குக் கருவி, நுணுக்குக்காட்டி, திசையறி கருவி, ஆயுதப்படையினர் அணிந்திருப்பதை ஒத்ததான துணிவகைகள், இரும்பும் இரும்புத் தகடுகளும், அலுமினியமும் அலுமினிய கம்பிகளும், வெற்றுச் சாக்குகள், சீமெந்து, பைசிக்கிள், றேசர்கள், பலகை, முட்கம்பி, வயர்வெட்டும் கருவிகள், தீப்பிடிகககூய உலோக வகைகள், கற்பூரம், நிலக்கரி, யூரியா உர வகைகள், பற்றறி வகைகள், வானொலி உதிரிப்பாகங்கள், மின்சார உபகரணங்கள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், மோட்டார் வாகன டயர்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள்கள், அச்சுத் தாள்கள், தட்டச்சு, பிரதிபண்ணல் தாள்கள், அச்சு இயந்திரங்கள், அச்சுக்கான ஏனைய உபகரணங்கள், போட்டோப் பிரதிக் கருவிகள், பாடசாலை பேக்குகள். சுகாதார துவாய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் பெண்கள மீது

## பாலியல் வன்முறை; 2 பேர் கொலை, வீடு தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீதான தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றனர். தமிழர்களின் வீடுகள், உடைமைகளைத் தீயிட்டு எரித்துள்ளது மட்டுமல்லாது, தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய பின் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச்சமபவங்கள் கடந்த சனிக்கிழமை கிரான், கும்புறுமுனை ஆகிய இடங்களில் இடம்பெற்றுள்ளன. இப்பகுதிகளில் உள்ள முகாம்களில் இருந்து வெளியேறி வந்த இராணுவத்தினர் கிரான்

(4ஆம் பக்கம் பார்க்க)

## உடப்பு சுற்றிவளைப்பு; ஐந்து தமிழர் கைது

(புத்தளம்)

புத்தளம்மாவட்டம் உடப்பு தமிழ்க் கிராமம் பொலிஸாரினால்சுற்றிவளைக்கப்பட்டது. இச்சுற்றிவளைப்பு கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

சிலாபம, வென்னப்புவ, முந்தல், வண்ணாத்திவில்லு, புத்தளம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து வந்த பொலிஸாரே இச்சுற்றிவளைப்பை நடாத்தினர்.

உடப்பு கிராமத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் வரையில் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் பின்னர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்நூறு, ஆயிரம் ரூபா நோட்டுக்களில்தீவிர கவனம்

(வவுனியா)

அண்மையில் ஆரம்பமாகிஉள்ள வவுனியா போக்குவரத்தில் வடக்கிலிருந்து வவுனியா நோக்கிச் செல்லும் பயணிகளிடம் இருக்கும் ஆயிரம் ரூபா, ஐந்நூறு ரூபா, நூறு ரூபாநோட்டுக்களைஇராணுவத்தினர் கடுமையான சோதனைக்குட்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இருந்த போதிலும் வடக்கிலிருந்து கொழும்பு செல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா பேட்டியால் ஆளுங்கட்சியில் சலசலப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் எஸ் தொண்டமான் கொழும்பு சண்டே ரைம்ஸ் த்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டி ஆளும் கட்சி உறுப்பினர் மத்தியில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசின் ஆயிரக்கணக்கான படையினர் முன் புலிகளினால் தாக்குப் பிடிக்க முடியும் என ஆனையிறவுப்போர் நிரூபித்து விட்டது என்று தொண்டமன் அழுத்தம் திருத்தமாகக் கூறியதும் ஏனைய தமிழ் குழுக்கள் பொருட்டல்ல எனறு மற்றக் குழுக்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## நவீன கருவிகள் தருவதாக பாதுகாப்பு அமைச்சர் உறுதி

-ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டு காவல்துறையினருககு மிக நவீன ஆயுதங்களையும் கருவிகளையும வழங்குவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு சரத்பவார் உறுதியளித்திருக்கிறார் என்று தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வார இதழ் ஒன்றுக்கு பேட்டி அளிக்கும் போது கூறியிருக்கின்றார்.

மேலும் தமிழ் நாட்டின் கிழக்கு கரையோரமாக ஐந்து கடற்படைத்தளங்களைஅமைக்கப்போவதாகவும்பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்ததாக கூறியிருக்கின்றார்.

வேலணை பெருங்குளம் அருள்மிகு
ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
**வருடாந்த மஹோற்சவம், 1991**

கொடியேற்றம்: **15-08 91** வியாழக்கிழமை
காலை **11** மணி
**தேர்: 24-08-91 சனிக்கிழமை காலை 8 மணி**
**தீர்த்தம்: 25-08-91 ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி**
**பூங்காவனம்: 26-08-91 திங்கட் கிழமை மாலை 3 மணி**

**குறிப்பு:-** பகல் திருவிழா காலை 10 மணி அளவிலும் இரவுத் திருவிழா மாலை 5 மணி அளவிலும் நிறைவுபெறும்

வேலணை: **ஆலயபரிபாலன சபை**

R/ 1636

வரிவிளம்பரம்

**தேவை**

பெண் காசாளர் / லிகிதர் தேவை. 14.08.91 4.00 மணிக்கு நேரில் வரவும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B/2937)

**வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**

விசேட
பொதுக்கூட்டம்
**18 - 08 - 91**

இச்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இச் சங்கத்தின் தலைவர் தலைமையில் வேலணை துறையூர் ஐயனார் வித்தியாசாலையில் 18-08-91-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 30 மணிக்கு நடைபெறும். இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

அத்துடன் ஊர்காவற்றுறை தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தின் இடம்பெயர்ந்த அங்கத்தவர்களும் இக் கூட்டத்தில் பங்குபற்றி உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய தீர்மானங்களை எடுப்பதற்கு சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**செயலாளர்**

(R/1639)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



**கந்தையா கமலக்கண்ணன்**
(யாதவன்)

அரியாலையில் வீரஜனனம் 26-08-1969
கட்டைக்காட்டில் வீர மரணம் 14-07-1991

''நீ மறைந்தவனல்ல; எங்கள் நெஞ்சங்களில் நிறைந்தவன்''

இந்த மண்ணை நேசித்து மரணத்தை யாசித்த யாதவனுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

அரியாலை தென்மேற்கு சிற்றூரவையும் பொதுமக்களும்

(R/1634)

# 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**வீரவேங்கை**
**டக்ளஸ்**
**(செல்வன்**
**விக்கினேஸ்வரன் சதீஸ்வரன்)**
(ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.)

| வீரஜெனனம் | வீரமரணம் |
|---|---|
| 14 01-1973 | 13 07-1991 |

உள்ளத்தால் இணைந்த உடன்பிறப்பே
அன்பினால் அரவணைத்த எம் டக்ளஸ்
பாசத்தால் பதைக்கின்றோம் கடமைக்காக - நீ
கண்ணியமாக சென்ற வேளை
ஆனையிறவு களத்திலே
கொடியவரின் குண்டினால் சிலையானாய்
ஆனால் உமது நினைவுகள்
எம் காலம் உள்ள வரை வாழ்ந்து கொண்டிருக்கும்
13-07-1991ஆந் திகதி ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த அனைத்து வீரவேங்கைகளுக்கும் வீரவணக்கம்.

பாடசாலை வீதி,
கரணவாய் வடக்கு.
கரவெட்டி.

உமது பிரிவால் துயருறும்
திருநாவுக்கரசு. சிவலிங்கம்,
சிவநாதன். சிவபாலன் குடும்பத்தினர்
மற்றும் செல்வருபன், காண்டீபன்,
துவாகரன் ஆகியோர்.

(R-1635)

**இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை**
**அமைய**
**ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர்**

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஒரே முறையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ் கணிதம் உட்பட ஆறு பாடத்தில் சித்தி அடைந்த ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தில் போதிய தகைமை உள்ளவர்கள் 17 - 08 - 91க்கு முன் விண்ணப்பிக்கவும். செய்முறைப் பரீட்சை 18-08-91 (முற்பகல் 9.00 மணிக்கு) இப் பணிமனையில் நடைபெறும். (தங்கள் தட்டச்சு இயந்திரங்களை கொண்டு வரவும்.) பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பெயர்ப் பட்டியல் 17.08.91ல்இல் இப் பணிமனையில் வெளியிடப்படும். தனித்தனியே கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

**சிவானந்தராசா**
கௌரவசெயலாளர்
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-2941)

# நினைவு கூருகின்றோம்...

**1991 - 08 - 13**

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் கைதடியில் சிறிலங்காப் படையினரின் அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 9 தமிழர்கள்

1985ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
★ **ஆனந்தன்** (சு.சிவானந்தராசா – முன்னம்போடி வெட்டை, மட்டக்களப்பு)

1986ஆம் ஆண்டு அடம்பனில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரமரணமெய்திய
**பன்னீர்** (இரத்தினம் பன்னீர்ச்செல்வம் - கல்முனை - 03)

1989ஆம் ஆண்டு மட்டக்களப்பு, மியாங்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**கேதீஸ்** (கு. கிருபைராஜா - சேனைக்குடியிருப்பு, மட்டக்களப்பு)

1990ஆம் ஆண்டு ஆரையம்பதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய
**பிரியவன்** (பொன்னையா தயாளன்-ஆரையம்பதி)

மன்னார், மாந்தைப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**றாஜன்** (தொம்மை பிலேஸ் – மணல்மோட்டை, மன்னார்)

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**லெப்.அன்பு** (தியாகராசா சிறீகாந்தன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

ஆனையிறவில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய
**சதீஸ்** (நாகேஷ்வரன் விக்கினேஸ்வரன்-353, செல்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி)

தமிழீழக் கடற்பரப்பில் பயணிகள் படகு மீது சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட குழந்தை உட்பட 2 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஆனந்தன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2939)


**வாருங்கள்! வாருங்கள்!!**

30 வீத கழிவு விலையில் மரத் தளபாடங்கள் வாங்க நாடுங்கள்!

# சஞ்சீவி

மரத்தளபாட விற்பனை நிலையம்,
இல. 31 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2931)

### சிந்தனைக்கு

அனுபவத்தின் பயன், அதிகம் பார்ப்பதில் அல்ல; அறிவோடு பார்ப்பதில்தான்

— ஸர் விஸ லியம் ஆஸ்வர்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 13-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 02 -2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05


# சிறிலங்காவின் சிந்தனை மாறவில்லை

ஆனையிறவுப் பெரும்போரைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கம் பெரும இராணுவ முஸ்தீபுக்களில் இறங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடிகளையும் மீறி இந்த இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

புதிய படை அணிகளை உருவாக்குதல், இராணுவத்தினரின் தொகையை அதிகரித்தல், முப்படைகளுக்கென பலகோடி ரூபா செலவில் நவீன ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் போன்றவற்றில் மிகத் தீவிரமாகச் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அதுவும் மிகக் குறுகிய காலத்தினுள் செய்து முடிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அதிபர் பிரேமதாஸா குறிப்பிடும் பேச்சு வார்த்தை, சமாதானம் என்பவையும கடந்தகாலத்தைப் போன்று ஒருபோலித்தனமானதே. இனப்பிரச்சினையால் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டும் கோடிக்கணக்கில் சொத்துக்கள் அழிக்கப்பட்டும் சிறிலங்காவின் பௌத்த தர்மம் தனது பேரினவாதச் சிந்தனையைக் கைவிடவில்லை

மேலும் சிறிலங்காவின்பொருளாதாரம் மிகவும் நெருக்கடியில் உள்ளது. இந்த வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் 6,055 கோடி ரூபா துண்டு விழுந்தது. இதில் சுமார் 2800 கோடி ரூபா கடனாகவும், 800 கோடி ரூபா உதவியாகவும் கிடைக்கும் என அப்போது தெரிவிக்கப் பட்டது. அதேவேளை, வருடம் 1000 கோடி ரூபாவை சிறிலங்கா கடனுக்குரிய வட்டியாக செலுத்தி வருகின்றது. எதிர்வரும் காலத்தில் இத்தொகை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கடந்த வரவு செலவுத்திட்டத்தில் 1173 கோடி ரூபா பாதுகாப்புச் செலவினத்திற்கென ஒதுக்கப்பட்டது. இது நிதி ஒதுக்கீட்டில் சுமார் 12.5 வீதமாகும் ஆனால், திட்டமிட்டதைவிட பாதுகாப்புச் செலவினம் இரட்டிப்பு மடங்கிற்கு மேல் சென்றுள்ளது. தற்பொழுது சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவினம் 2500 கோடி (25000 மில்) ரூபா என நிதி அமைச்சர் டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார் இது செலவீட்டில் சுமார் 25 வீதமாகும். இதன் மூலம் உலகில் தேசிய வருமானத்தில் உயர்ந்தளவில் இராணுவச் செலவீட்டை செய்யும் நாடுகளில் ஒன்றாக சிறிலங்காவும் வந்துள்ளது.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடமும், உலக வங்கியிடமும் தனது பொருளாதாரத் திட்டங்களை சிறிலங்கா அரசாங்கம் ஒப்படைத்து விட்டது என்றே சொல்ல வேண்டும். உலக வங்கியும, சர்வதேச நாணய நிதியமும் சொல்பவற்றைச் சிறிலங்கா அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது.

மக்கள் மயப்படுத்தல் என்ற போர்வையில் தனியார் மயப்படுத்தல் மேற்குலகத்தவரின் நலனை முழுமையாகப் பேணக்கூடிய பொருளாதாரக் கொள்கை. விரும்பிய போது நாணயப் பெறுமதி இறக்கம், மானிய திட்டங்களால் பெரும் வெட்டு போன்ற சகல சிபார்சுகளையும் சிறிலங்கா சிறப்பாகச் செயற்படுத்துகின்றது.

உலக நிதி நிறுவனங்களிடமும், நாடுகளிடமும் இவ்வாறு நித்க்கு மண்டியிட்டபோதும் சிறிலங்கா அரசாங்கம் தனது இனவாதக் கொள்கையைக் கைவிடுவதாக இல்லை. நாடு எக்கேடு கெட்டாலும், பௌத்த பேரினவாதச் சிந்தனைகளை உதறிவிட சிறிலங்கா தயாராக இல்லை. அதேவேளை ஆனையிறவில சிறிலங்கா இராணுவத்திற்கு விழுந்த பலமான அடி புலிகளுடனான வலுச்சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தி விட்டதா என்ற அச்சத்தையும் சிறிலங்காவிற்கு ஏற்படுத்திவிட்டது.

இந்நிலையிலேயே பாரிய இராணுவ விரிவாக்க முயற்சியில் சிறிலங்கா இறங்கியுள்ளது. அதேவேளை சிறிலங்கா வின் இந்த இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கை இலங்கையின் இனப்பிரச்சினைகளுக்கு அண்மையில் தீர்வு ஒன்று இல்லை என்பதோடு, பேச்சுவார்த்தை மூலமோ அன்றி வேறு சமாதான வழிமுறைகள் மூலமோ தீர்வு எதுவும் இல்லை என்பதையும் வெளிப்படையாக உணர்த்துவதாகவுள்ளது.

ஆகையினால் தவிர்க்கமுடியாமல் தமிழரும் சிறிலங்காவின் யுத்த முஸ்தீபிற்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும். இதைத்தவிர வேறுவழி எதுவும் இல்லை. சிறிலங்காவின் பேரினவாதச் சிந்தனைக்கு இராணுவரீதியிலேயே நாமும் பதிலடி கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து நாம் விடுபட முடியும். இதற்கு புலிகளின் தலைமையில் மக்கள் அனைவரும் அணி திரள வேண்டும்.

# வன்னிக் கிராமப் புறங்களில் பெரும் உணவுத் தட்டுப்பாடு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதியெங்கும் உணவுப் பொருள்களுக்கான பற்றாக்குறை மோசநிலையை அடைந்துள்ளது.

கிராமப்புறக் கடைகளில் அத்தியாவசிய பொருள்கள் எவையும்விற்பனைக்குகாணப் படவில்லை. இதன் காரணமாக பொதுமக்கள் பெரிதும் கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து பொதுமக்கள் ஸ்தாபனங்கள் மூலமும், சமூக நிறுவனங்கள்மூலமும் வவுனியா கிராமப்புறங்களுக்கென அத்தியாவசிய உணவுப் பொருள்கள்எவையும்அனுப்பி வைக்கப்படவில்லை என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது.

கடந்த மாதம், வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமப் புறங்களுக்கென கடந்த வருடம் நவம்பர் மாத உணவுப் பொருள்கள் நிவாரணமாக அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பின்னர், இந்த வருடத்திற்குரிய எந்த விதமான நிவாரணப் பொருள்களும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்படாத நிலையில் மக்கள் வேதனையடைந்துள்ளனர்.

இச்சமயத்தில், அகதி முகாம்களுக்கு வெளியேஉள்ளவர்களுக்கு நிவாரண உணவுப் பொருள்கள்வழங்குவது தடை செய்யப்பட்டிருப்பதாக சமீபத்தில் அரசினால் வெளியிடப்பட்ட அறிக்கைவவுனியா பகுதி மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைக்கு உள்ளாகும் பகுதிகளிலிருந்து வெளியேறிய பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கில் உறவினர், நண்பர்களின் வீடுகளில் பலமாத காலமாக எதுவித உதவியுமற்று தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## ஆங்கில ஆசிரியர்கள் தற்காலிக நியமனம்

(கொழும்பு)

ஒய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களையும், ஆங்கிலம் தெரிந்த ஒய்வு பெற்ற அரச ஊழியர்களையும் தற்காலிக ஆங்கில ஆசிரியர்களாக நியமனம்செய்யகல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இவ்வகையில் நாடெங்கிலும் சுமார் 3,000 க்கும் அதிகமான வெற்றிடங்கள்நிரப்பப்படவுள்ளன. பயிற்றப்பட்ட ஆங்கில, பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும் வரை இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

பட்டதாரிகளுக்கு ரூபா 75-ம், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ரூபா 50-ம், அரச ஊழியர்களுக்கு ரூபா 40-ம் மணித்தியாலம் ஒன்றுக்கு வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

மூன்றாம் தவணை முடிவடைவதற்குள் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. வெற்றிடங்கள் நிரப்புவதற்கான தேர்வுக் குழுவில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரும், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் அங்கம் வகிப்பார்கள்.

ஆசிரியர்கள் அல்லாத அரச ஊழியர்களுக்கு ஒரு வாரப் பயிற்சி வழங்கப்படும்

மேற்கூறிய தகவல்களை கல்வி மற்றம் உயர் கல்வி அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

## பரீட்சைக்குச் சென்ற மாணவர் மீது விசாரணை

(வவுனியா)

வவுனியா கிராமப் புறங்களிலிருந்து நகரப்பகுதி பரீட்சை நிலையங்களுக்கு க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதும் நோக்குடன் சென்ற மாணவர்கள் நகரப் பகுதியில் வைத்து மூன்று இடங்களில் சிறிலங்கா இராணுவ உளவுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாம் திகதி, பரீட்சை எழுதும் 28 மாணவர்களை அழைத்துச்சென்ற ஆசிரியர் நால்வரும் மேற்படி உளவுப் பிரிவினரால் கடுமையான முறையில் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா கல்வித்திணைக் களத்தைச் சென்றடைந்த இம் மாணவர்கள் வெள்ளை நிற வானில் வந்த உளவுப் பிரிவினரால் ஆனையிறவில் இடம் பெற்றுவரும் யுத்தம் பற்றியும், மரணித்தபோராளிகளின் தொகை பற்றியும், வவுனியா பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் பற்றியும் விசாரித்துள்ளனராம்.

இந்த விசாரணையினால் ஆசிரியர்களும், பரீட்சை எழுதச் சென்ற மாணவர்களும் அச்சமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது (தி)

## அணுஆயுத பரவலை கட்டுப்படுத்த சீனா தயார் -- லீபெங்

(பீகிங்)

அணு ஆயுதப் பரம்பலைத் தடை செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடசீனா தயாராக உள்ளது என்று சீனப் பிரதமர் லீ பெங் அறிவித்துள்ளார். இதுவரை காலமும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட சீனா மறுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவுக்கு சென்றிருக்கும் ஜப்பான் பிரதமர் டோசிகிகைபூ சீனப்பிரதமர் லீபெங்கை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்பே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜப்பானிய பீரதமர் கைபூ, தியனன்மன் சதுக்கத்திலுள்ள மாவீரர்களின் நினைவு ஸ்தூபிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஜனசக்தி சன சமூக நிலையத்தில் விஸ்வநாதசர்மா வைத்தீஸ்வர சர்மா என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## றிச்சாட்டின் இறுதி ‘டெஸ்ட்’

(லண்டன்)

கிரிக்கெட் முன்னணி வீரர்களில் ஒருவரான மேற்கிந்திய அணியைச் சேர்ந்த வில்லியம் றிச்சாட் கடைசி ‘டெஸ்ட்’ கிரிக்கெட்டை லண்டனில் முடித்துக்கொண்டார்.

இங்கிலாந்து ‘ஓவல்’மைதானத்தில் நடைபெற்ற இந்த நான்காம் நாள் ஆட்டத்தில் அறுபது ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார். இவரின் இந்த ஓட்டங்கள் இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து மேற்கிந்திய அணியைக் காப்பாற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

பதினெட்டு ஆண்டு கால கிரிக்கெட் டெஸ்ட் வரலாற்றில் வில்லியம் றிச்சாட் 121 டெஸ்டுகளில் விளையாடி 8540 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவற்றுள் 24 சென்சறிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## போர்க்கால கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல்வேறு இடங்களில் போர்க்கால கருத்தரங்குகள் நடைபெறஉள்ளன இன்று இரவு எட்டு மணிக்கு ஒரே நேரத்தில் நடைபெற இருக்கும் இக்கருத்தரங்குகளில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் பலர் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இக்கருத்தரங்குகள் வலிகாமத்தில் கோப்பாய் தெற்கு மாதா கோயிலடி, சண்டிலிப்பாய் இளவாலை பத்தாவத்தை ஆகிய இடங்களிலும் வடமராட்சியில் கரவெட்டி இமையாணன் சலாம் விளையாட்டு அரங்கு, வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் கோடிஸ் தூபியடி தென்மராட்சிசாவகச்சேரி நலபுரம் கைதடி குருசாமி வித்தியாலயம் சாவகச்சேரி மட்டுவில் கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை, தீவகத்தில் வேலணை புங்குடுதீவு வீரமலை இராஜேஸ்வரி வித்தியாலயம் வேலணை புங்குடுதீவு சிவலைப்பிட்டிகாளி கோயிலடி ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

## வெற்றி வேண்டி பிரார்த்தனை

(பருத்தித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இறை ஆசி வேண்டி கரவெட்டி முங்கோடை முருகன் ஆலயத்தில் 1008 வில்வ அர்ச்சனையும் விசேட பூசைகள் ஆராதனைகளும் இடம்பெற்றன. இதனை கரவெட்டி தெற்கு சிற்றூரவை ஒழுங்கு செய்திருந்தது. (25)

## பாதிப்புற்ற அரச ஊழியர் விபரம் திரட்டப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் இறந்த அல்லது பாதிப்புற்ற அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொருட்டு பாதிப்புற்ற ஊழியர்களின் விபரங்களை அவ்வத் திணைக்களங்களிடமும் கூட்டுத்தாபனங்களிடமும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றுநிருபம் மூலம் கோரியுள்ளது.

இதன் பொருட்டு இவ்வூழியர்களின் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்கள் அவரில் தங்கியிருப்போர் சம்பந்தமான உதவி அரச அதிபரின் அறிக்கை போன்ற விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

மேற்படி நஷ்டஈடு இதுவரை கடமையில் இருக்கும் போது பாதிப்புற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுவந்தது

ஆனால் இறுதியாக அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தின்படி வன்செயலால் பாதிப்புற்ற ஊழியர்களுக்கும் இந்த நஷ்டஈடு வழங்கப்படவுள்ளதாகவும் இதில் கைம்பெண், அனாதை ஒய்வூதியம், மரணப்பணிக்கொடை, கடமைக்காலம் முடியும் வரையான சம்பளம், புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்படும் நன்கொடை என்பன அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## மாணவருக்கு உலர் உணவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வெளி மாவட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உலர் உணவை வழங்கி வருகிறது.

இந் நிவாரணம் இதுவரை இருநூற்றி நாற்பத்தைந்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## நிவாரணம் நிறுத்தியதற்கு அரசுமீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தொழில் வாய்ப்பு பாதிக்கப்பட்டும் பொருள்களைப் பெறமுடியாத நிலையிலும்சுய தொழில் வசதி வாய்ப்புகள் இழந்த நிலையிலும் துன்பத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உலர் உணவு நிவாரணத்தை நிறுத்தியது குறித்து வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகம் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்த நிவாரணம் நிறுத்தப்பட்டது குறித்து நேற்று யாழ். செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் அக்கழகம் இரண்டு கோரிக்கைகளைமுன் வைத்தது. இதுவரை வழங்கி முடிக்கப்படாத வாராந்த நிவாரணத்தைசகலருக்கும் வழங்கல், நாட்டில் சுமுக நிலை ஏற்படும் வரை தொடர்ந்தும் இந்நிவாரணத்தைச் சகலருக்கும் வழங்கல் என்ற இரண்டு கோரிக்கைகள் அடங்கிய கண்டன அறிக்கை ஒன்றை இக்கழகத்தின் தலைவர் வெளியிட்டுள்ளார்.

## 'கரங்கள் பணியகங்கள்'

(பருத்தித்துறை)

விடுதலைப் போரிலே காயமடையும் விடுதலை வேங்கைகளின் மருத்துவ பராமரிப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக வடமராட்சிப் பகுதியில் ஐந்து 'கரங்கள் பணியகங்கள்' செயற்படத் தொடங்கியுள்ளன. புலோலி மந்திகையில் கரங்கள் பொதுப்பணியகமும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நெல்லியடி, சக்கோட்டை ஆகிய பகுதிகளில் கரங்கள் கிளை பணியகங்களும் இயங்கி வருகின்றன. கரங்கள் பொதுப்பணியகம் 24 மணித்தியாலங்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றது

விடுதலைப் போரிலே சிறிலங்கா இவராணுத்துடன் நேரடி மோதலிலும், ஏனைய சிறிலங்கா பாதுகாப்புப்படையினரின் தாக்குதல்களினாலும் காயமடைந்துள்ள விடுதலை வேங்கைகளின் மருத்துவப் பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள பொதுச் சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கரங்கள் பணியகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டதற்கிணங்க பெருந்தொகையான சமூகசேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் காயமடைந்துள்ள விடுதலை வேங்கைகளின மருத்துவப் பராமரிப்புக்காகத் தொடர்பு கொண்டு செயற்பட்டுவருகின்றனர். (25)

## கடலோரக்கிராமத்தில் தீவிரதேடுதல்

(சென்னை)

இராமேஸ்வரம் அருகே இராமகிருஷ்ணபுரம் என்ற கடலோரக் கிராமத்தில், அடர்ந்த சவுக்குத் தோப்புகளுக்குள் புலிகள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து பேரைத் தேடும் பணியில் ஆயுதப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இராமநாதபுரம் பொலிஸ் கண்காணிப்பாளர் வி பாலச்சந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பொலிஸார் சேகரித்த சில தகவல்களைத் தொடர்ந்து தேடுதல் வேலையைத் தாம் மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்,

இலங்கைத் தீவிரவாதிகள் ஒளிந்திருக்கக் கூடிய ஓரிரு இடங்களைப் பற்றித் தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்றும், இது குறித்துப் புலனாய்வு செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேடப்படும் ஐவருக்கும் கடத்தலுடன் தொடர்பிருக்கிறது என்ற சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்த அவர், அவர்கள் பிடிபட்டு விசாரிக்கப்பட்ட பின்பே அவர்கள் இங்கு வந்ததற்கான நோக்கத்தை அறிய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தொலைத்தொடர்புத் திணைக்களம்
## செப்டெம்பர் ஒன்று முதல் கூட்டுத்தாபனமாகிறது

(கொழும்பு)

சிறிலங்கா தொலைத் தொடர்புத் திணைக்களம் அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து தொலைத்தொடர்புகள் கூட்டுத்தாபனமாக இயங்க உள்ளது என தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய கூட்டுத்தாபனமே இனிமேல் தொலைத் தொடர்பு துறையை அபிவிருத்தி செய்வதில் பணியாற்றும் என தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பாரதீய ஜனதா - சிந்தியா விவகாரம் சபாநாயகரிடம்

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சி குறித்து மத்திய போக்குவரத்து அமைச்சர் மாதவராவ் சிந்தியா குறிப்பிட்ட கருத்து தொடர்பாக எழுப்பபட்ட சர்ச்சை குறித்த இறுதிமுடிவு சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவை முதல்வர் அர்ஜுன் சிங் விடுத்த வேண்டுகோளை அடுத்து சபாநாயகரிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பிரச்சினைகளையும், மக்களது பிரச்சினைகளையும்எடுத்துக்கூறும் பாராளுமன்றம் தடங்கலின்றி நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அதற்கு ஏதுவாக பாரதீய ஜனதாக் கட்சி தொடர்பான விடயங்களைச் சபாநாயகர் ஏற்க வேண்டும் என்றும்'' கேட்டுக்கொண்டார்.

இதற்கு ஆதரவு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானியும் கருத்துத் தெரிவித்தார். 'இந்தப் பிரச்சினையை தமது கட்சி பாராளுமன்றத்திற்கு வெளியே தான் கதைக்கும்'' என்று தெரிவித்தார்.

## கூட்டுப்படை தலைமைச் செயலக
## அதிகாரிகள் லஞ்சம் பெற்று எரிபொருள் அனுமதி வழங்கினர் --குணரெட்ணா

(கொழும்பு)

வடபகுதிக்கு எரிபொருள் எடுத்துச் செல்வதற்கு பெருமளவிலான பணம் லஞ்சம் பெற்றுக் கொண்டு கூட்டுப்படை தலைமைச் செயலக அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளார்கள். கூட்டுப்படைத் தலைமைச் செயலகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது இது தெரிய வந்துள்ளது. இது பற்றிய விபரங்களை வெளியிடுமாறு சுதந்திரக்கட்சிஉறுப்பினர் சி வி. குணரெட்ணா பிரதம மந்திரியும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி பி. விஜயதுங்காவிடம் கேள்வி கேட்டார்.

கடந்த திங்களன்று பாராளுமன்றத்தில் மேற்படி கேள்வியைக் கேட்ட சி. வி. குணரெட்ணா மேற்படி லஞ்ச மோசடியில் சம்பந்தப்பட்டுள்ள கடற்படைத் தளபதி, இளைப்பாறிய பிரிகேடியர் மற்றும் நுகேகொட வர்த்தகர் ஆகியோரின் விபரங்களை வெளியிடுமாறும் கேட்டார்.

சிறிலங்கா இராணுவ மேஜர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்என்பதைபிரதமமந்திரி அறிவாராஎன்று அவர் மேலும் வினா எழுப்பினார்.

## நோயாளர்களும் கொழும்பு செல்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறையில் இருந்து கொழும்பு செல்லும் கப்பலில் இன்று நோயாளர்களும் கொண்டு செல்லப்பட உள்ளனர்.

அண்மையில் இந்த நோயாளர்கள் வைத்தியசாலையில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டதுடன் கொழும்பு மருத்துவ மனையில் சிகிச்சை பெறுவதற்கான பரிசோதனைகளிலும் சமுகம் தந்திருந்தனர். (லோ)

## இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவனில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடாத்தியதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின்போது கோண்டாவிலைச் சேர்ந்த க. சசிகுமார் (வயது 17), மல்லாகத்தைச் சேர்ந்த முருகேசு ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். (க)

## முரல் குத்தி காயம்

கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் மீது முரல் மீன் பாய்ந்ததில் அவர் பலத்த காயமடைந்துள்ளார்.

குருநகரைச் சேர்ந்த தாசியஸ் என்பவர் நேற்று மீன் பிடிக்கச் சென்ற சமயம் முரல் மீன் ஒன்று இவரதுதொடைப் பகுதியை நோக்கிப் பாய்ந்து இவருக்கு பலத்த காயத்தை ஏற்படுத்தியது. (க

### உடப்பு

ஐவர் விசாரணைக்கென முந்தல் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வடமாகாணத்தைச் சேர்ந்த சிலர் இக்கிராமத்திற்குள் ஊடுருவியிருப்பதாக வந்த செய்தியைத் தொடர்ந்தே இச் சுற்றிவளைப்பு நடாத்தப்பட்டதாம்.

### சிறிலங்கா

சிக்கும் நிலை உருவாகி வருவதாகவும்தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் சுமார் 60 கட்ட நிவாரண விநியோகம் வழங்கப்படுவதற்குப் பதிலாக 16 கட்ட நிவாரண விநியோகமே வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் சகல கட்ட நிவாரண விநியோகங்களும் தொடர்ந்தும் வழங்கப்படடு வருவதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி தகவல்கள் அனைத்தும் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றது. (ச)

### பாலியல்

பகுதியில் உள்ள ஒரு தமிழரின் வீட்டைத் தீயிட்டு எரித்ததுடன், அப்பகுதியில் உள்ள இரண்டு பெண்களைப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கித் துன்புறுத்தி, துப்பாக்கியால் சுட்டுக்கொலையும்செய்துள்ளனர்.

கடந்த சில காலங்களுக்கு முன்னர் தமிழர்களை இரகசியமாகக் கடத்துவதும், பின்னர் அவர்களை வீதியோரங்களில் சூட்டுக் காயங்களுடன் வீசிவிட்டுச் செல்வதும், கிராமங்களுக்குள் புகுந்து மக்களைத் துன்புறுத்துவது உட்படப்பல் வேறுபட்ட அத்துமீறல்களை இழைத்து வந்த இராணுவத்தினர் சில நாட்களாகச் சற்று ஒய்வுகண்டிருந்தனர். ஆனால் இந்தக் கொலை, கொள்ளைகளைத் தற்போது மீண்டும் ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வடக்கே

கள், தங்கம், மதுசாரம், சத்திரசிகிச்சை உபகரணங்கள், மருந்துகள், பெற்றோல், டீசல், உராய்வு நீக்கி எண்ணெய்,பொலித்தீன், பொலித்தீன்பைகள், மெழுகு, மெழுகுதிரிகள், டர்பன் தைலம், பிராலோ, சப்பாத்துப் பொலிஷ் சவர்க்காரம், இரசாயனங்கள், சோயா உணவுகள், இனிப்புகள், இனிப்புப் பொருள்கள் ஆகியன.

இத் தடைசெய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்வதானால் புனர்வாழ்வு அமைச்சிடம் அனுமதி பெறவேண்டும். அவ்வனுமதிப் பத்திரங்கள் நேற்றுமுதல் வழங்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்து வெடிமருந்துகள், ஆயுதங்கள், யூரியா பசளை ஆகியவை எடுத்துச் செல்லத் தடைசெய்யப்பட்டுள்ளது

### ஐந்நூறு

வோருக்கான தொகை வெகு குறைவாகவே காணப்படுவதாகவும் கொழும்பிலிருந்து ரயில் மூலம் வவுனியா வந்து வடபகுதிக்குச் செல்வோருக்கான தொகையே அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

### நிவாரண

இம் மறியல் போராட்டம் தொடர்பாகவும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகவும் பணியாற்றுவதற்காக உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு ரீதியாக செயற்பாட்டுக் குழுக்களும் கலந்துரையாடல்களும் பின்வரும் திகதிகளில் குறிப்பிடும் இடங்களில் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 4-00 மணியளவில் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில் உ அ அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், கொக்குவில் இந்துக் கல்லூரியில் நல்லூர் உ. அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும் நடைபெறும்.

நாளை புதன் கிழமை முற்பகல் 10-00 மணியளவில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் சங்கானை உ. அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் சண்டிலிப்பாய் உ.அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சாவகச்சேரி உ.அ அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், ஹாட்லிக் கல்லூரியில் பருத்தித்துறை உ. அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், நாகர் கோயில் அ.த.க. பாடசாலையில் மருதங்கேணி உ. அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், இதே தினம் பிற்பகல் 3-00 மணியளவில் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் ஊர்காவற்துறை உ.அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், பிற்பகல் 3-00 மணியளவில் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் கரவெட்டி உ.அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில்கோப்பாய் உ அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும். பிற்பகல் 4.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் யாழ், உ.அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் சரஸ்வதி வித்தியாசாலையில் வேலணை உ.அ. அதிபர் பிரிவுக்கான கலந்துரையாடலும் நடைபெறும்.

### தொண்டா

எடுத்தெறிந்து கருத்து வெளியிட்டதும் ஆளும் கட்சி வட்டாரங்களில் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளன. இவை தொடர்பாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்கும் அவர்கள் கொண்டு வந்துள்ளதாகத் தெரிகிறது.

### கிளிநொச்சி

ஆகியனவே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கமே இவற்றை எடுத்து வந்தது எனவும் தற்போது இராணுவ கெடுபிடியால் அவர்கள் மறுத்து விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.